DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 57/2024 |
| Deposition of witness | : | P W- 6 |
| Name | : | முகமது ரிஷ்வான் |
| Father's /Husband Name | : | முகமது இலியாஷ் |
| Village | : | சேலம் |
| Taluk | : | சேலம் |
| Age | : | 36 |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 05th day June, 2025.
Accused A1 absent. 355 petition filed and allowed. A2 present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சேலத்தில் மருத்துவ உயர்கல்வி பயின்று வருகிறேன், கடந்த 21.02.2020 ம் தேதி மதியம் 03.45 மணியளவில் நன்னிலம் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது 40 வயது மதிக்கத்தக்க குருமூர்த்தி என்பவரை அவரது சகோதரி சுஜாதா என்பவர் மூலம் என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவரை நான் விசாரித்தபோது அன்று மதியம் 03.00 மணியளவில் தெரிந்த இரண்டு ஆண் நபர்களால் இரும்பு கம்பி மற்றும் கத்தியால் தாக்கப்பட்டதில் தலையில் காயம் ஏற்பட்டதாக கூறினார். அவரை நான் பரிசோதித்த போது சுயநினைவுடன் இருந்தார். அவரது தலையில் முன்பக்கத்தில் இருந்த வெட்டுக்காயத்திற்கு மூன்று தையல் போட்டேன். அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைத்தேன். மேற்படி நபருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேடு **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நபர் கூறியவாறு தாக்கப்பட்டிருந்தால் அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

மேலும் அதே நாள் அதே நேரத்தில் 50 வயது மதிக்கத்தக்க செந்தில்குமார் என்பவரை அவரது சகோதரி சுஜாதா என்பவர் மூலம் என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவரை நான் பரிசோதித்த போது சுயநினைவுடன் காணப்பட்டார், அவரை நான் விசாரித்தபோது அன்று மதியம் 03.00 மணியளவில் தெரிந்த இரண்டு ஆண் நபர்களால் இரும்பு கம்பி மற்றும் கத்தியால் தாக்கப்பட்டத்தில் தலையில் காயம் ஏற்பட்டதாக கூறினார். அவரை நான் பரிசோதித்த போது சுயநினைவுடன் இருந்தார். அவரது தலையில் முன்பக்கத்தில் இருந்த வெட்டுக்காயத்திற்கு இரண்டு தையல் போட்டேன். அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைத்தேன். மேற்படி நபருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேடு **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நபர் கூறியவாறு தாக்கப்பட்டிருந்தால் அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

குருமூர்த்தி என்பவர் தையல் போட்ட பிறகு சுயநினைவுடன் காணப்பட்டார் என்றால் சரிதான். காயமடைந்த நபர்கள் தாக்கியவர்களின் பெயர்களை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான் ஆனால் பெயர்கள் கேட்பது வழக்கமில்லை. நான் ஸ்கேன் எடுத்து பார்த்தேனா என்றால் அவ்வசதி மேற்படி மருத்துவமனையில் இல்லாததால் அரசு திருவாரூர் மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். இருசக்கர வாகனத்தில் சென்று மேற்படி இரண்டு நபருகளும் கீழே விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

M S
BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.06.05 15:31:07 +0530